
...ஸெட்டின் இணைப்பு பதிப்பு

18-5



இதயம் அளிக்கும்...

இராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்



...ாரிப்பு:
...ரியன்

...இசை:
...குமார்

...வண்ணப்
...டங்கள்:
...காபுலு

கதை அமைப்பு & டைரக்ஷன்
டி.எஸ்.நாராயணஸ்வாமி

விலை ரூ. 45-

இராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்



18-5

முன்னுரை:-

காஸெட் பக்கம் : A

மனித உருவில் வாழ்ந்த தெய்வம் ஸ்ரீராமன். அவன் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள், நாம் வாழ வேண்டிய வழி முறைகளை விளக்கும் தத்துவங்கள். தான் தெய்வம் என்பதை வார்த்தைகளால் பிரகடனம் செய்யாமல், தான் வாழ்ந்த விதத்தால் விளக்கிக் . காட்டியவன் ஸ்ரீராமன்.

தியாகத்தின் உருவாக, பண்பின் சிகரமாக, தர்மத்தின் பிரதிநிதியாக, தவத்தின் காவலனாக வாழ்ந்த ஆரண்ய ராமனை

எபிகாஸெட்



இதயம் அளிக்கும்
புண்ணிய பாரதத்தின்
புனித காவியம்

தண்டகாரண்யவனத்தில் கண்டோம். விதிவசத்தால் தன்னை விட்டுப்பிரிந்த மனைவி சீதையைத் தேடிக்கொண்டு தண்ட காரண்யம் விட்டு, கிஷ்கிந்தை நாட்டின் எல்லையில் அமைந்த ருஷ்யமுக மலைச்சாரலில்... கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள்! எங்கோ பக்திப் பரவசத்துடன் ராமநாமம் ஒலிக்கிறதே...

"ராம்... ராம்... ராம்...."

கதை சொல்பவர்: ருஷ்ய முகமலைச்சாரலை ராமனும் லட்சுமண னும் நெருங்கிக் கொண்டிருந்தபோது இந்த ராம சப்தம்தான் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மலையின் சிகரமொன் றில் அமர்ந்துகொண்டு மனதை ஒருமுகப்படுத்தி சித்த சுத்தி யோடு ராமஜெபம் செய்து கொண்டிருந்தான் ஒரு வானர வீரன். அவன்தான் ஆஞ்சநேயன்—அஞ்சனாதேவிக்கும், வாயு தேவனுக்கும் மகனாகப் பிறந்தவன் அவன். அவனுக்கு மாருதி என்ற பெயரும் உண்டு. தோற்றத்தில் வானரத்தைப் போலி ருந்தாலும் தெய்வீக அழகும், ஆண்மையும், வீரமும் ஞானமும் பெற்று விளங்கிய அவன், அடக்கமுள்ளவனாகவும் இருந்தான். அவன் தாய் அஞ்சனாதேவி அவனிடம் ஓர் உண்மையைக் கூறி யிருந்தாள்:

அஞ்சனா: மகனே ஆஞ்சநேயா, நீஒரு தெய்வீகத் திருப்பணிக்காகஇவ்வுலகில்தோன்றியிருக்கிறாய். பூவுலகில் துஷ்டர்களை அழித்து தர்மத்தைக் காக்க பகவான் ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீராமனாக அவதாரம் செய்வார். அப்போது நீ அவரைச் சரணடைந்து, அவர் அடிய வனாகப் பணிபுரியும் பாக்கியம் அடைவாய். எவரொரு வர் உன்னை முதல்முதலில் பார்த்ததும் 'ஹனுமான்' என்றழைக்கிறாரோ அவரே ஸ்ரீராமன் என்று அறிந்து கொள். அதுவரை தூயபக்தியோடு அவர் நாமத்தை ஜெபித்துக் கொண்டு நற்பணிகளைச் செய்து வா.

(பாட்டு)

'நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராமா என்றிரண்டு எழுத்தினால்'

கதை சொல்பவர்: இவ்வாறு தாயிடம் 'ராம நாம' உபதேசம் பெற்று ராமனைக் காணுமுன்பே அவன் நாமத்தின் பெருமையை அறிந்து அதற்கு அடிமையானவன் ஆஞ்சநேயன்.

அவன்தான் மோன நிலையில் அமர்ந்து ராமநாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தான். ராம நாமத்தை சிரத்தை யோடு ஸ்மரிக்கும் பக்தன் யார் என்பதை ஸ்ரீராமன் தெரிந்து கொண்டான், ஜெபத்தை முடித்துக்கொண்டு கண்விழித்த

மாருதி, அந்த வழியே தபஸ்விகள் வேடத்தில் வந்து கொண்டிருந்த இரண்டு வீரர்களைக் கண்டான்.

மாருதி விவேகம் மிக்கவன். தன் புத்திக் கூர்மையால் வருகிறவர்கள் தெய்வீக மனிதர்களாக இருக்கவேண்டுமென ஊகித்து, அவர்களைச் சந்திக்க அவர்கள் முன் நின்றான்.

ராமன்: ஹனுமான்... என்னைத் தெரிகிறதா...?

ஹனுமான்: பிரபு...! ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி! தங்களுக்காகவே இத்தனை நாள் தவம் செய்து காத்திருந்தேன். என் தாயின் வாக்கு பலித்துவிட்டது. இதோ என் உடல், பொருள், ஆவி அனைத்தும் தங்கள் திருவடிகளுக்கே அர்ப்பணம். என்னை சேவகனாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

கதை சொல்பவர்: இப்படித்தான் ஹனுமானும், ராமனும் சந்தித்தனர். ஸ்ரீராமன் திருவடிகளை ஹனுமான் இறுகப்பற்றிக்கொண்டான். அவனை உளமாரத்தழுவி அவன் இதயத்தில் நீங்காமல் வியாபித்துக் கொண்டான் ஸ்ரீராமன். லட்சுமணனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. பலவருடங்கள் பழகியவர்கள்போல ராமனும்—ஹனுமானும் மனம்விட்டுப்பேசினர். தன் வனவாச வரலாற்றை ஹனுமானுக்குச் சுருக்கமாகக் கூறினான் ராமன். சீதாதேவியை இராமன் பிரிந்து தவிக்கிறான் என்ற செய்தியறிந்ததும் ஹனுமான் கதறியழுதான். எப்பாடுபட்டேனும் அன்னையைத் தேடிக் கண்டுபிடிப்பேன் என்று உறுதி பூண்டான். ருஷ்யமுக மலையில் துன்பங்களுக்கு ஆளாகித் தவிக்கும் வானர வீரன் சுக்ரீவன் பற்றி ஸ்ரீராமனுக்கு ஹனுமான் கூறினான்.

ஹனுமான்: பிரபு, தங்களைப்போலவே துயருற்று வாழும் என் நண்பன் சுக்ரீவன் இந்த மலைச்சாரலில்தான் தஞ்சமடைந்துள்ளான். அவன் அண்ணன் வாலி. கிஷ்கிந்தையின் தலைவன். தம்பி சுக்ரீவனிடம் விரோதம் கொண்டு, அவன் மனைவியை அபகரித்துக்கொண்டு நாட்டைவிட்டே துரத்திவிட்டான். அசுர பலமும், சக்தியும் வாய்ந்த வாலியை எதிர்க்க முடியாமல் நல்லோர்களின் உதவிநாடி இந்த மலையில் தஞ்சம் புகுந்துள்ளான் சுக்ரீவன். நானும், சுக்ரீவனும் அவன் வானரக் கூட்டமும் இனி தங்கள் அடியவர்கள். தயைகூர்ந்து என்னோடு வாருங்கள். தங்கள் தரிசனத்தால்தான் சுக்ரீவன் துயர் நீங்க வேண்டும்.

ராமன்: ஹனுமான், துன்பத்தில் உழல்பவர்களுக்கு அவர்களைப் போன்றவர்களே ஆறுதல் தர முடியும். வா போகலாம்.





கதை சொல்பவர்: சகோதர பாசத்திற்காக எதையும் தியாகம் செய்யும் மனப்பான்மை கொண்ட லட்சுமணன் உள்ளத்தில் வாலி சுக்ரீவன் போன்ற சகோதரர்களின் விரோத மனப் பான்மை ஆச்சர்யத்தையும், அதிர்ச்சியையும் அளித்தது. இப்படியும் சகோதரர்கள் இருப்பார்களா என எண்ணினான்.

லட்சுமணன்: ஹனுமான், வாலி ஏன் சுக்ரீவனை அடித்துத் துரத்தவேண்டும். அவன் என்ன தவறு செய்தான்?

ஹனுமான்: பிரபு! ஒரு காலத்தில் வாலியும் சுக்ரீவனும் அன்பும் பாசமும் கொண்ட சகோதரர்களாகவே வாழ்ந்தனர். வாலி கிஷ்கிந்தையின் மன்னனாகப் பேரும், புகழும்



பெற்று வாழ்ந்தான். அதைக்கண்டு பொருமை கொண்ட மாயாவி என்ற அரக்கன் கிஷ்கிந்தையை அபகரிக்க வாலியைப் போருக்கு அழைத்தான். ஒரு பெரிய மலைக்குகைக்குள் இருவருக்கும் பலமாதங்கள் மற்போர் நிகழ்ந்தது. குகையின் வாயிலில் அண்ணனுக்காகக் காத்திருந்தான் சுக்ரீவன். திடீரென ஒரு நாள் வாலியின் ஈனமான மரணக்குரல் ஒலித்தது. 'ஆ... சுக்ரீவா...' என்ற வாலியின் குரலைத்தொடர்ந்து குகையின் வெளியே ரத்தம் வழிந்தோடுவதை சுக்ரீவன் கண்டான். அண்ணன் வாலியே மடிந்துவிட்டான். இனி மாயாவி வெளியே வந்தால் தன்னையும், கிஷ்கிந்தையையும் அழித்துவிடுவான் என்ற பயத்தில் குகையின் மேலுள்ள ஒரு பாறையைக் கீழே உருட்டி, குகையை அடைத்துவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பிவிட்டான் சுக்ரீவன். அண்ணனைப்பிரிந்த துயர் மறையு முன்பே அமைச்சர்களும், வானர மக்களும் சுக்ரீவனுக்கு முடிசூட்டி மன்னனாக்கிவிட்டார்கள்.

ஆனால், குகையில் உண்மையில் நடந்தது வேறு. வாலிதான் மாயாவியைக் கொன்றான். சாகுமுன்பு வாலியைப்போல் குரலை மாற்றிக்கொண்டு ஈனக்குரல் எழுப்பியவன் மாயாவிதான்.

லட்சுமணன்: என்ன கொடுமை இது? மாரீசன் செய்த சூழ்ச்சியைப் போலவே இந்த மாயாவியும் செய்திருக்கிறானே...

ஹனுமான்: ஆம் பிரபு! குகையிலிருந்து வெளியே வந்த வாலி, குகை மூடப்பட்டிருப்பதைப் பார்த்தான். குகைக் கல்லை தன் புஜபலத்தால் புரட்டிவிட்டு, வெளியே வந்தான். கிஷ்கிந்தையின் எல்லை வந்ததும் சுக்ரீவன் முடிசூட்டிக்கொண்ட செய்தி அறிந்தான். தன்னை வஞ்சித்து ஏமாற்றி நாட்டை அபகரித்துக் கொண்டதாக சுக்ரீவன்மீது சந்தேகப்பட்டான். கோபம் அவன் அறிவை மறைத்தது. ஆத்திரம் அவனை சிந்திக்கவிடவில்லை. நேராக கிஷ்கிந்தை வந்து தம்பி சுக்ரீவனை பலம் கொண்ட மட்டும் தாக்கினான். அவன் எவ்வளவோ மன்றாடி உண்மையை எடுத்துச்சொல்லியும் அந்த மூர்க்கன் செவி சாய்க்கவில்லை. உயிர்பிழைத்தால் போதுமென ஓடினான் சுக்ரீவன். வாலி விடவில்லை. துரத்தினான்; கடைசியில் வாலியால் வர முடியாத இந்த ருஷ்யமுகமலைச் சாரலில் தஞ்சம் புகுந்தான் சுக்ரீவன். எனக்கு நண்பன் ஆனான். இதுதான் நடந்த உண்மை.

லட்சுமணன்: ஹனுமான், வாலியால் இந்த எல்லைக்கு மட்டும் ஏன் வர இயலவில்லை?

ஹனுமான்: அது ஒரு மாதிரி விசித்திரமான கதை பிரபு.

துந்துபி என்ற அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் எருமை வடிவம் கொண்டவன். அவன் கிஷ்கிந்தை வனத்தையே அழித்துக் கொண்டிருந்தான். அதனால் கோபமுற்ற வாலி ஒருமுறை துந்துபியின் வாலைப்பிடித்து இழுத்து விண்ணிலே எறிந்தான். அந்த எருமையின் உடல் இந்த ருஷ்ய முக மலையில் பட்டுச் சிதறியது. அப்போது இங்கே தவம் செய்துகொண்டிருந்த மதங்க முனிவர் மேல் அந்த ரத்தத்துளிகள் சிந்தியது. 'இந்தக் கொடுமையைச் செய்து தவத்தைத் தடுத்தவன் இந்த எல்லையில் நுழைந்தால் அவன் தலை வெடிக்கட்டும்' என்று முனிவர் சாபமிட்டார். அதனாலேயே வாலி இந்த எல்லைக்கு வர முடியாமல் போயிற்று. அதுவே சுக்ரீவனுக்கு அடைக்கலபூமியாகிற்று.

கதை சொல்பவர்: ஹனுமான் தந்த விளக்கத்தால் சுக்ரீவனைக் காணுமுன்பே அவன் மீது அனுதாபமும் பற்றும் பாசமும் ராம லட்சுமணர்களுக்கு ஏற்பட்டது. ராம லட்சுமணர்களைத் தன் தோளில் சுமந்துகொண்டு சுக்ரீவன் இருப்பிடம் வந்தான் ஹனுமான். எப்போதுமே பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த சுக்ரீவன் தூரத்தில் யாரோ இருவரை ஒரு வானரம் சுமந்துகொண்டு வருவதைப்பார்த்து முதலில் பீதியடைந்தான். பிறகே அது ஹனுமான் என்றறிந்ததும், அவன் தூக்கி வரும் மானிடர்கள் ஹனுமானின் நண்பர்களாகத்தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தது. ராம லட்சுமணர்களை சுக்ரீவனுக்கு ஹனுமான் அறிமுகம் செய்தான்.

ராமன்: சுக்ரீவா! உன் வரலாறு முழுவதும் ஆஞ்சநேயனிடமிருந்து தெரிந்து கொண்டேன். கவலை வேண்டாம். நாங்கள் தசரத புத்திரர்கள் நால்வர். கங்கை வேடன் குஹனுடன் ஐவரானோம். இன்று உன்னையும் சேர்த்து அறுவராகிறோம்.

கதை சொல்பவர்: ராமன் சுக்ரீவனைத் தழுவிக்கொண்டான். சுக்ரீவன் ராம லட்சுமணர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். ஹனுமான் சுக்ரீவனிடம் அன்னை சீதா பிராட்டியை ராவணன் அபகரித்துச்சென்ற வரலாற்றைக் கூறினான்.

சுக்ரீவன்: பிரபு! தங்களுக்கு நேர்ந்திருக்கும் துயரத்தைக் கேள்விப்படுகையில் என் துன்பம் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. தங்கள் தயவாலும், உதவியாலும் வாலியை நான் வென்றுவிட்டால், கிஷ்கிந்தையின் வானர சேனை முழுவதையும் தங்கள் காலடியில்



வைத்து தங்கள் திருப்பணிக்கே என்னை அர்ப்பணித்துக்கொள்வேன்.' அன்னையை தேடிக்கண்டு பிடித்து தங்கள் துயர் தீர்ப்பேன். இதுசத்தியம்.

ராமன்: சுக்ரீவா, கவலைப்படாதே! வனவாசத்தில் அதர்மத்தை அழித்து, தர்மத்தைக் காக்க வேண்டியது என்பணி. நீயும் மனைவியைப்பிரிந்து துயர்படுபவன். அந்த வேதனை எனக்குத் தெரியும். வாலியை வென்று நீ இழந்ததைப் பெற வழி செய்



கிறேன். புறப்படு உடனே கிஷ்கிந்தைக்கு. வாலியுடன் போர் தொடங்கலாம்.

கதை சொல்பவர்: சுக்ரீவன் சற்றுத்தயங்கினான்: வாலியின் பராக்ரமத்தை எண்ணிப்பார்த்தான். அவனை ராமனால் ஜெயிக்க முடியுமா என்ற சந்தேகம் சுக்ரீவன் மனதில் தோன்றியது. அதனை ஊகித்துக்கொண்டான் ராமன். தன் தோள் வலிமையையும், திறமையையும் சுக்ரீவன் தெரிந்து கொள்ளட்டும் என அம்பு ஒன்றை எடுத்து வில்லிலே நாணேற்றி எய்தான். அது அங்கே இருந்த ஏழு மரங்களை வரிசையாகத் துளைத்துக்கொண்டு, விண்ணிலே சென்றது. சுக்ரீவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. தன்னை காக்க ராமனால் தான் முடியும் என்பதை உணர்ந்துகொண்டான். இருந்தாலும் வாலியுடன் போரிடுவதில் மற்றொரு சிக்கல் இருந்தது. அதை சுக்ரீவன் ராமனிடம் சொன்னான்.

சுக்ரீவன்: பிரபு! இந்திரனிடமிருந்து தவம் செய்து பெற்ற மந்திர மாலை ஒன்று அண்ணன் வாலியிடம் இருக்கிறது. அதை அவன் அணிந்து கொண்டு போருக்குப்புறப்பட்டால் யாருடன் போர் புரிகிறானோ அந்த எதிரியின் பலத்தில் பாதி அவனுக்கு வந்துவிடும். அவனோடு தாங்கள் போரிட்டாலும், நான் போரிட்டாலும் நம் பலத்தில் பாதி அவன் பெற்று விடுவான். அப்படியிருக்க அவனை வெல்வது...

ராமன்: சுக்ரீவா! எந்த பலத்தை அவன் மந்திர சக்தியால் பெறுகிறானோ அந்த பலத்தை நான் மறைந்திருந்து அழித்து விடுகிறேன். நீ வாலியுடன் போர் புரியும் போது உன் பலத்தில் பாதியை இழந்தாலும், என் பலத்தை நம்பி நீ கடமையைச் செய். அதர்மம் எப்போதுமே ஜெயித்ததில்லை. பயப்படாமல் புறப்படு.

கதை சொல்பவர்: சுக்ரீவனுக்கு இப்போது முழு நம்பிக்கையும் பலமும் வந்தது. அவர் நன்றிப்பெருக்கால் ராமன் திருவடிகளில் விழுந்தான். தன்னிடம் ராமலட்சுமணர்களை அழைத்து வந்ததற்காக ஹனுமானுக்கு நன்றி சொன்னான். மற்ற சில வானரங்களும் ஹனுமானும் புடைசூழ சுக்ரீவன் ராமனின் புகழ்பாடிக் கொண்டு கிஷ்கிந்தை நோக்கிப் புறப்பட்டான்.

நாதநாமக்ரியை:

சுத்தப் பிரம்ம பராத்பர ராமா

காலாத்மக பரமேஸ்வர ராமா
சண்ட கிரண குல தண்டன ராமா
ஸ்ரீமத் தசரத நந்தன ராமா
தண்டகாவவஜன பாவன ராமா
துஷ்டவிராத விஞசவ ராமா
ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராமா
ஸீதாப்ரிய ஹரிஞனுக ராமா;

புன்ஞகவராளி:

ஹனுமன் ஸேவித நிஜபத ராமா
நத சுக்ரீவா பீஷ்டத ராமா
கர்வித வாலி ஸம்ஹாரக ராமா
வானர தூதப் ப்ரேஷக ராமா
ஸ்ரீராம ஜெயராம ஜெயராம ராமா
ஜெய ஜெயராம்;

கதை சொல்பவர்: கிஷ்கிந்தையின் எல்லேயில் ஓர் வனத்தில் ராம லட்சுமணர்களும் ஹனுமானும் தங்கிக் கொண்டனர். சுக்ரீவன் வாலியின் அரண்மனே வாயில்வரை சென்று அவனேப் போருக்கு அழைத்தான். கோபாவேசத்துடன் வாலி புறப்பட்டு சுக்ரீவனேத் துரத்திக் கொண்டு நகரின் எல்லேயைத் தாண்டி ஆரண்யம் வரை வந்தான்.

அங்கே எக்காளமிட்டுக்கொண்டு இருவரும் மற்போர் தொடங்கினர். ஆரண்யத்தில் ஒரு மரத்தின் பின் நின்று நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தான் ராமன். வாலியின் தாக்குதலேச் சமாளிக்க முடியாமல் சுக்ரீவன் சுருண்டு விழுந்தான். வாலியைத்தாக்கி சுக்ரீவனேக்காக்க நினேத்த ராமனுக்கு ஒரு பெரிய பிரச்சினே ஏற்பட்டது. தோற்றத்தில் ஒரே மாதிரி இருந்த இரு வானர வீரர்களில் வாலி எது, சுக்ரீவன் யார் என்று கண்டுகொள்ள முடியாமல் தவித்தான் ராமன். கோர யுத்தம் நடந்தது. சுக்ரீவனுல் வாலியின் தாக்குதலேச் சமாளிக்க இயலவில்லே. ராமனின் உதவியும் கிட்டாததால் சுக்ரீவன் உள்ளத்தில் பயம் குடிகொண்டது. நம்பிக்கை வீணுனது. உயிர் பிழைக்க யுத்த பூமியிலிருந்து தப்பி ஓடி மறைந்து கொண்டான். வாலியின் வெற்றிச்சிரிப்பால் கானகமே அதிர்ந்தது. வாலி மீண்டும் கிஷ்கிந்தை திரும்பினுன்.

ராமனே இப்படி வாக்குத்தவறித் தன்னே தக்க தருணத்தில் காப்பாற்ருமல் கை விட்டு விட்டானே — யாரை இனி நம்புவது என்று சுக்ரீவன் ஏங்கித்தவித்தபோது ராமன் அவனேத் தேற்றினுன்.

ராமன்: சுக்ரீவா, நீயும் வாலியும் வேற்றுமை கொண்டு போராடியபோதும் உங்கள் உருவத்தில் வேறுபாடு

காண முடியாத ஒற்றுமையைக் கண்டேன். என் அஸ்திரத்தால் தவருக உனக்குத் தீங்கிழைத்து விடக்கூடாதே என்றுதான் தயங்கி நின்றேன். நீ மீண்டும் யுத்த பூமிக்குச் செல்கையில் இந்த மாலையை அணிந்து செல். ஜெயவிஜயீபவ!

கதை சொல்பவர்: சுக்ரீவன் மனதில் மீண்டும் நம்பிக்கை துளிர் விட்டது. மீண்டும் கிஷ்கிந்தை வந்து வாலியைப் போருக்கழைத்தான். சுக்ரீவன் மறுமுறையும் போருக்கு வந்திருப்பதை எண்ணி வாலி நகைத்தான். ஆனல், அவன் மனைவி தாரை விவேகத்துடன் தடுத்தாள்.

தாரை: ஸ்வாமி! சகோதரர்களிடையே ஏன் இந்த விரோதம். வேண்டாம். சுக்ரீவனுடன் சமாதானம் செய்து கொண்டு, பாசத்துடன் வாழுங்கள். அதுதான் நல்லது.





வாலி: என்னை அவமதித்து வலியவந்து போருக்கு அழைக்கும் இளையவனிடம் அஞ்சி கோழைபோல் சமாதானம் செய்யச் சொல்கிருயா...?

தாரை: பிரபு! எனக்கென்னவோ இன்று சற்று பயமாகவே இருக்கிறது. நேற்றுத் தங்களிடம் தோற்று ஓடியவன் இன்று மீண்டும் துணிவோடு வந்திருக்கிருன் என்ருல் துணையோடு அல்லது புதிய பலத்தோடுதான் வந்திருக்க வேண்டும். தாங்கள் எதற்கும்...

வாலி: தாரை! அரக்கன் மாயாவியை அழித்தவன் நான். துந்துபியை விண்ணிலே வீசியவன்நான். பத்துத்தலை ராவணேஸ்வரனை என் வாலில் கட்டித்தூக்கி வந்து என் புதல்வன் அங்கதனின் தொட்டில் மீது தொங்க விட்டவன்நான். எவராலும் வெல்ல முடியாத இந்த வாலியை சுக்ரீவன் வெல்வதா...? இன்று அவனை நிரந்தரமாக ஒழித்துவிடுகிறேன் பார். சென்று வருகிறேன். சுக்ரீவனை வென்று வருகிறேன்.

காஸட் — பக்கம் : B

இராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம் - இரண்டாம் பகுதி

கதை சொல்பவர் : இரண்டாம் முறையாக சுக்ரீவன் வாலி போர் தொடங்கியது. வாலி – சுக்ரீவப்போரில் வனமே அழிந்து கொண்டிருந்தது. பாறைகளைப் புரட்டி, ஒருவர் மேல் ஒருவர் எறிந்து கொண்டனர். மரங்களை வேரோடு பிடுங்கி அடித்துக்கொண்டனர். சுக்ரீவனின் பலத்திலும் பாதியைஎடுத்துக் கொண்டதிஞல் வாலியின் கையே ஓங்கிநின்றது. ஒரு குறிப்பிட்ட தருணத்தில் வாலியின் மரணப்பிடியில் சிக்கி சுக்ரீவன் தரையில் வீழ்ந்து தவித்தபோது, தூரத்திலிருந்து பாணம் ஒன்று வந்து வாலியைத்தாக்கியது. அவன் மார்பில் தைத்தது... அது ராமன் எய்த பாணம். பாணம் தன் நெஞ்சைத் துளைத்துச் செல்லாமல், தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அதனைக் கையால் தடுத்துப்பார்த்தான். முடியவில்லை. வாலால் பாணத்தைச் சுற்றிக் கையால் இறுகப் பிடித்துக்கொண்டு, குரல் கொடுத்தான்:

வாலி: என் பலத்துக்கு சவால் விடும் இந்த பாணத்தை எய்

தவன் யார்...? என் முன்னே வா!

ராமன்: பாணத்தை எய்தவன் நான்தான் வாலி.

வாலி: நீயா... தபஸ்வியைப்போல் வேடம் தரித்துக்கொண்டு, அரசனைப்போல் தோற்றம் கொண்டு, வேடன்போல் மறைந்திருந்து பாணம் எய்திருக்கிறாய். நான் உனக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லையே... மற்றொருவனோடு நான் போர் புரிந்துகொண்டிருக்கையில் நீ ஏன் என்னைத் தாக்கினாய். இது தர்மமா..?

ராமன்: வாலி! நான் தசரதகுமாரன் ராமன். தர்மத்தைக்காக்க வனவாசம் மேற்கொண்டேன். அதர்மத்தை அழித்து நல்லவர்களைக் காக்கும் பணி என்னுடையது. நீ எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆனால், என் சகோதரனுக்குத் தீங்கிழைத்திருக்கிறாய்?

வாலி: உன் சகோதரனுக்கா..? நானா...?

ராமன்: ஆம்; சுக்ரீவன் உன் உடன் பிறந்த சகோதரன். ஆனால் உன் வெறுப்பையும், துவேஷத்தையும் பெற்றவன்; பாசத்தால் என்னை அடைந்தவன். அதனால் அவன் என் சகோதரன். ராவணனால் அபகரித்துச்செல்லப்பட்ட என் மனைவியை மீட்டுத்தர எனக்கு உதவி செய்ய உறுதி பூண்டவன். அவனுக்குப் பிரதியுபகாரமாக, அவனுக்குத் தீங்கிழைத்த உன்னைத்தாக்கினேன்.

வாலி: ராமா... நீ தசரதகுமாரன்... உன்னை தர்மஸ்வரூபன் என்றும் ஞானத்தில் சிறந்தவன் என்றும் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், அது எத்தனை பொய்யானது என்பதை நிரூபித்துவிட்டாய். என் பெயரைக் கேட் டாலே நடுங்குபவன் ராவணன். நீ விவேகியானால் உன் மனைவியை மீட்க என் உதவியையல்லவா நாடி யிருக்கவேண்டும். நான் செய்தி அனுப்பினாலேபோதும். ராவணன் சீதையை உன் காலடியில் கொண்டு வந்து விட்டிருப்பான். அதை விட்டுவிட்டு என்னையே எதிர்க்க முடியாத இந்தக் கோழையின் துணையை நாடியிருக் கிறாயே...?

ராமன்: வாலி! உன் வீரத்தைப்பற்றியும், பெருமையைப்பற்றியும் மட்டுமல்ல. உன் சிறுமையைப் பற்றியும் எனக்குத் தெரியும். ராவணனும் பிறன் மனைவியை விரும்பி யவன். நீயும் பிறன் மனைவியை அபகரித்தவன். இரு வருமே ஒரே வகையான பாவத்தைப் புரிந்தவர்கள். இதில் ஒரு குற்றவாளியை மற்றொரு குற்றவாளியால் திருத்த முடியுமா? ஆனால், என்னைப்போல பாதிக்கப்




பட்டவன் சுக்ரீவன். துயருற்றவர்களுக்குத்தான் மற்ற வர்கள் துன்பம் புரியும். பிறரைத்துன்புறுத்தி மகிழ் பவர்களுக்கு மற்றவர் துயரம் எப்படிப் புரியும்?

வாலி: ராமா! நீ சாமர்த்தியசாலி. என் உதவியைப் பெருத தற்குச் சரியான காரணம் காட்டிவிட்டாய். என்னுடன் நேருக்கு நேர் நின்று போரிட்டு ஜெயிக்காமல் மறைந் திருந்து தாக்கியதற்கும் ஏதாவது தர்ம நியாயம் வைத்திருக்கிருயா...?

ராமன்: ஏன் இல்லே? சுக்ரீவனுடன் நீ புரிந்ததுமட்டும் நேர்மை யான யுத்தமா? இந்திரன் தந்த மந்திரமாலேயை அணிந்து எதிரியின் பலத்தில் மறைமுகமாகப் பாதி யைப் பெற்றுக்கொண்டுதானே நீ வெற்றி பெற நினேத் தாய். உன் பலத்தில் உனக்கே நம்பிக்கை இருந்திருந் தால் மாற்ருன் பலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன?

ராமா: உண்மைதான். வெற்றி பெற வேண்டும் என்றஎண்ணம் மேலோங்கி நின்றபோது என்னேயுமறியாமலே என் வீரத்தையும், பலத்தையும் நானே இழிவு படுத்தி இருக்கிறேன். நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது.

ராமன்: வாலி! நீ சுக்ரீவனிடமிருந்து பெற்ற அதிக பலத்தை அழிக்கவே அந்த அம்பை எய்தேன். அதற்கு எனக்கு உரிமை இருந்தது. காரணம், சுக்ரீவன் என் சகோதரன்.





வாலி: ராமா! மந்திரத்தால் நான் பெற்ற பலத்தை மறைந்திருந்துதான் அழிக்க வேண்டுமோ? சுத்தவீரனைப் போல நேரில் நின்று தாக்கியிருக்கலாமே!

ராமன்: வாலி! நன்ருகச் சிந்தித்துப்பார்...நான் உன்னை நேருக்கு நேர் போரில் எதிர்ந்திருந்தால் என் பலத்திலும் பாதியை நீ பெற்றிருப்பாய். தெரிந்தோ தெரியாமலோ அதர்மத்தின் பக்க பலமாக என் பலம் பயன்படுவதை என்னுல் அனுமதிக்கமுடியாது. அதனுல்தான்...

வாலி: உண்மைதான் ராமா! மறைந்திருந்து அறம் காத்திருக்கிருய். உன்னை குறைகூற முடியவில்லை, ஆனுல் ஒன்று மட்டும் புரியவில்லை. என்பக்கபலத்தை அழித்தேன் என்ருய். ஆனுல் வினுடியில் என் பலம் தோற்று விட்டதே?

ராமன்: உன் பக்கபலம் அழிந்த பின்பு உன் சொந்த பலம் மட்டும் உன்னைக் காக்கப் பயன்படவில்லை? காரணம், உன் தவறுகளே உன்னை பலவீனப்படுத்திவிட்டன. அறிவின் திறன் கொண்டு சிந்திக்காமல் சொந்த சகோதரனையே விரோதியாக எண்ணி, அவன் மனைவியை அபகரித்து பாபங்கள் புரிந்தாய். உன் தீவினைகளேதான் உன்னை இப்போது அழித்துக் கொண்டிருக்கிறது.

வாலி: ராமா! என் அகக்கண்களைத்திறந்து விட்டாய். வெறும் உடல் பலத்தால் கர்வமுற்று, அறியாமையில் வாழ்ந்த என் ஆணவத்தை உன் பாணத்தால் அழித்துவிட்டாய். இப்போது நான் மரணம் அடையவில்லை.

மறுபிறவிதான் எடுத்திருக்கிறேன். சுக்ரீவா! தம்பி... என்னை மன்னித்துவிடு.

சுக்ரீவன்: அண்ணு! என்ஞல் தங்கள் உயிருக்கே ஆபத்து நேர்ந்து விட்டதே. இந்தப் பாவியை மன்னித்து விடுங்கள் பிரபு... ராமச்சந்திரா... தங்கள் பாணம் என் அண்ணன் உயிரைப் பிரித்துவிடாமல் அவனேக்காப்பாற்றி விடுங்கள்.

வாலி: தம்பி, ராமன் கருணைமூர்த்தி! அவன் அழிப்பதெல்லாம் தீமையைத்தான். கலங்காதே.

கதை சொல்பவர்: சுக்ரீவனைத் தேற்றிஞன் வாலி. தன் மகன் அங்கதனை அழைத்து 'அவனை மகன் போல பாவித்துக் கொள்ளும்படி சுக்ரீவனிடம் ஒப்படைத்தான். தம்பி சுக்ரீவனுக்கே பட்டம் கட்டி அங்கதனை இளவரசனுக்கி கிஷ்கிந்தையை அவர்களிடம் ஒப்படைக்கும்படி ராமனை வேண்டிக்கொண்டான். உயிர் துறக்கும் முன் ராமனைப்பார்த்துச் சொன்ஞன் வாலி.

வாலி: ராமா... தம்பிகளுக்காகவே அனைத்தையும் வழங்கும் அண்ணன் நீ. உன் நாட்டை உன் தம்பி பரதனுக்குத் தந்து பெருமை தேடிக் கொண்டாய். என் நாட்டை என் தம்பி சுக்ரீவனுக்குத்தந்து எனக்கும் பெருமைதேடித் தந்தாய். ஒரே ஒரு வேண்டுகோள். உன் பாணத்தின் வேகத்தையும், வலிமையையும் உணர்ந்தவன் நான். என் தம்பி எப்போதாவது ஏதாவது தவறிழைத்துவிட்டால் உன் அம்பை அவன் மேல் எய்துவிடாதே. அதனைத் தாங்கும் வலிமை அவனுக்கு இல்லை. என் மகனையும், தம்பியையும் உன்னிடமே ஒப்படைக்கிறேன்.





ராமன்: வாலி! தவறு செய்யும் போது மனிதன் மிருகமாகிறான். தவறுகளை உணர்ந்து திருந்தும்போது அவன் தெய்வமாகிறான். உன் பணி முடிந்துவிட்டது. உனக்கு மோட்ச பதவி காத்திருக்கிறது.

கதை சொல்பவர்: வாலி உயிர்துறந்தான். மோட்சமடைந்தான். சில நாட்கள் சென்றன சுக்ரீவனின் பட்டாபிஷேகத்திற்காக ஏற்பாடுகள் நிகழ்ந்தன. வனவாசகாலத்தில் நகர எல்லைக்குள் நுழையக்கூடாது என்ற விரதம் பூண்டிருந்தமையால் ராமன் சுக்ரீவன் பட்டாபிஷேகத்தை நடத்த இயலவில்லை. தம்பி லட்சுமணனிடம் அந்தப் பணியைத்தந்தான்.

கிஷ்கிந்தை விழாக்கோலம் பூண்டது.

கிஷ்கிந்தையின் மக்கள் அகம் மகிழ, லட்சுமணன், சுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனை கிஷ்கிந்தை மன்னனாக்கினான். அங்கதனுக்கு இளவசரப்பட்டம் கட்டினான். கிஷ்கிந்தையில் நல்லாட்சி ஏற்படுத்தி, தனக்கு வாழ்வளித்த ராமன் புகழ் பாடி தன் நன்றியைத் தெரிவித்தான் சுக்ரீவனும், ஹனுமானும். சிலநாட்கள் சென்றன. சிறையெடுத்துச் செல்லப்பட்ட சீதை இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் சுக்ரீவனும் அவன் சேனைகளும் தனக்கு உதவுமென பொறுமையுடன் காத்திருந்தான் ராமன். ஆனால், அரசபதவியேற்று உல்லாசங்களில் ஈடுபட்டு தன் கடமையை மறந்து உண்டுகளித்து உறங்கிக் கொண்டிருந்தான் சுக்ரீவன். இதை அறிந்த இளையவன் லட்சுமணன் ஒருநாள் கொதித்தெழுந்தான்.

லட்சுமணன்: அண்ணா! அந்த சுக்ரீவன் நன்றி கெட்டவன். பதவி பெற்றதும் அதற்குக் காரணமாயிருந்தவர்களுக்கு அளித்த வாக்கை மறந்துவிட்டான். அரசபோகத்தில், குடித்து மகிழ்ந்து கேளிக்கைகளில் திளைத்து ராம சேவையை மறந்த அந்த சண்டாளனுக்குத் தாங்கள் யார் என்பதை நினைவுப்படுத்திவிட்டு வருகிறேன். என் வில்லில் நாணேற்றி அந்த மூடனுக்குப் பாடம் கற்பிக்கிறேன் — உத்தரவு தாருங்கள் அண்ணா.

ராமன்: தம்பி! பொறுமையாக இரு. பாவம் சுக்ரீவன். பல நாட்கள் வனத்தில் துன்பம் அனுபவித்தவன். இன்பத்தைக்கண்டு சற்று ஏமாந்துவிட்டான். என்ன இருந்தாலும் அவன் நம் சகோதரன் அல்லவா. ஹனுமான்! நீயும் தம்பியுடன் சென்று சுக்ரீவனுக்கு அவன் தவறைச்சுட்டிக் காட்டி, கடமையைச் செய்ய வழி காட்டுங்கள். லட்சுமணா! பேச்சுவார்த்தைகளால் பலன்

இல்லாமல் போனால்தான் கைகலப்பு வேண்டும். அதுவரை உன் வில்லுக்கு வேலை தராதே.

கதை சொல்பவர்: சுகபோகங்களில் திளைத்து கடமையை மறந்திருந்த சுக்ரீவனுக்கு நல்லுபதேசம் செய்து, அவன் தவறைச் சுட்டிக்காட்டித் திருத்தினான் ஹனுமான். சுக்ரீவன் வெட்கத்தால் தலைகுனிந்தான். நேராகத் தன் படைகளுடன் ராமனின் இருப்பிடம் சென்றான். ராமனின் திருவடிகளில் விழுந்தான்.

சுக்ரீவன்: ஐயனே, சரணம்! அபராதம் செய்த என் பிழை பொருத்தருளுவீர். இதோ நானும் வாலி மைந்தன் அங்கதனும் வானரப்படைகளும் தங்கள் சேவைக்காக எங்களை அர்ப்பணித்துவிட்டோம். பல நூற்றாண்டுகள் வாழ்ந்தும் வரும் கரடிகளின் தலைவன் ஜாம்பவான் என் நண்பன். நன்மைகளையே செய்கின்ற நல்லவனான அவனும் தங்களைச் சரணடைந்து தங்கள் சேவைக்கென வந்துள்ளான். ஏற்றுக்கொண்டு அருள்பாலியுங்கள்.

ஜாம்பவான்: பிரபு! காலம் காலமாக தங்கள் தரிசனத்துக்காகக் காத்திருந்தவன் இன்று அதன் பலனை அடைந்தேன். என்னையும் தங்கள் அடியவனாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

ராமன்: என் தந்தையை விட மூத்தவரான தங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. சுக்ரீவா, இனி சீதையைத் தேடும்பணி தொடங்கலாம். ராவணன் மாயாவி. தென் இலங்கைக்குத்தான் சென்றான் என்றாலும், சீதையை அவன் எங்கே சிறை வைத்திருக்கிறானோ தெரியாது. எனவே எல்லாதிசைகளிலும் தேடுவோம். திறமை மிக்க சிலரை மட்டும் தென் திசைக்கு அனுப்புவோம். ஹனுமான்! இப்படி வா, தென்திசையில் செல்லும் வீரர்களுக்குத் தலைமை தாங்கி நீயும் அங்கதனும் செல்லுங்கள். இதோ இந்தக் கணையாழியை வைத்துக்கொள். ஒருவேளை சீதாதேவியை நீ கண்டால் இந்தக் கணையாழியைக் காட்டு. நீ என்னுடைய தூதன் என்பதற்கு இது அடையாளமாக இருக்கும். அவள் இருக்குமிடம் அறிந்து வா. அவள் நிலை தெரிந்து வா. அவள் தரும் சேதியைக் கொண்டு வா.

ஹனுமான்: பிரபு... பெரிய பொறுப்பினைத்தந்து என்னை ஆட்கொண்டீர்கள். தங்கள் நாமத்தின் பெருமையும் வலிமையும் எனக்கு நிச்சயம் வெற்றியைத் தேடித்தரும். என்னை ஆசீர்வதியுங்கள்.


ஹனுமான்: ஜெய்ராம்... ஜெய்ராம்.

கதை சொல்பவர்: சுக்ரீவனும் சில வானரங்களும் ஒரு திக்கில் சென்றனர். ஹனுமானும், அங்கதனும், ஜாம்பவானும் மற்ற வானரங்களுடன் தென்திசை நோக்கிச் சென்றனர். கிஷ்கிந்தை வனங்களைக் கடந்து பாரதகண்டத்தில் தென் கிழக்குப்பகுதியில் அமைந்த கோடிக்கரை என்ற சமுத்திரப்பகுதியை அடைந்தனர். அனுமனும் மற்றவர்களும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலே காட்சி தந்தது. எப்படிச் செல்வது என்று எல்லோரும் சிந்தித்துக்கொண்டிருந்த நேரத்தில் அந்த இடத்தில் ஒரு ராட்சஸ கழுகு ஒன்றைக் கண்டான், ஹனுமான். அந்தக் கழுகின் பெயர் சம்பாதி. ஒருமுறை சூரியனுக்கு மிக அருகில் பறக்க நினைத்ததால் சிறகுகள் கருகி, பறக்க முடியாமல் ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தது சம்பாதி. பல நூறு மைல்கள் வரை பார்க்கும் சக்தி அதன் கூறிய கண்களுக்கு இருந்தது. உட்கார்ந்த இடத்திலேயே பிராணிகளையும், ஐந்துக்களையும் பிடித்து கொதித்தின்று வாழ்ந்த சம்பாதி ஒரு வானரக் கூட்டம் வருவதைப் பார்த்ததும் தன் இறைதேட ஆயத்தமானது. அப்போது ஹனுமான் ஜடாயுவைப்பற்றி பேசிக்கொண்டு வந்ததால் சம்பாதி சற்று ஆச்சரியமடைந்து ஹனுமான் அருகில் மெல்ல நகர்ந்து வந்தது. அந்த வானரக்கூட்டங்கள் ராம சேவையில் ஈடுப்பட்டிருப்பதை அறிந்து ஹனுமானிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டது.

சம்பாதி: ஐயா! என்பெயர்சம்பாதி. நான்ஜடாயுவின் சகோதரன். என் அண்ணன் ஜடாயு ராம சேவை செய்து மோட்சமடைந்தான். நானும் தங்களுக்கு ஏதாவது உதவி செய்யமுடியுமானல் செய்கிறேன்.

ஹனுமான்: சம்பாதி, தென்திசையில்தான் அன்னையை இராவணன் தூக்கிச் சென்றான் என்று தங்கள் சகோதரன் ஜடாயு சொல்லியிருக்கிறான். மேற்கொண்டு தங்களுக்கு ஏதாவது தெரிந்தால்..

சம்பாதி: ஐயா.. என் சிறகுகள்தான் கருகிவிட்டனவே தவிர, என் கண்பார்வை வெகு தூரத்தில் இருக்கும் பொருள்களைக்கூட காணும் சக்தியை பெற்றது. இதோ தென் திசையில் கூர்ந்து ஏதாவது தெரிகிறதா என்று பார்க்கிறேன். ஆஹா! அதோ தெரிகிறது, அழகிய இலங்கா நகரம்..அங்கே மாடமாளிகைகள். அவற்றின் நடுவே ஒரு அசோகவனம். அதன் அடியில் தேவதை போன்ற ஒரு மானிடப்பெண். தலைவிரிகோலமாகக் காட்சி



தருகிறார்கள். அவர்கள்கண்களில் கண்ணீர். அவர்களைச் சுற்றி சில அரக்கிகள். புனிதமான அந்தப் புண்ணியவதி சீதாதேவியாகத் தான் இருக்க வேண்டும்.

ஹனுமான்: ஜெய்ராம்.. ஜெய்ராம்..

மகிழ்ச்சியில் வானரங்கள் ஆனந்தக்கூத்தாடினர். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சம்பாதியின் கருகிய சிறகுகள் முளைக்க ஆரம்பித்தன. முழுவடிவத்துடன் பறக்கும் நிலையில் நின்றது. சம்பாதி — அன்னை சீதையை அத்தனைத் தூரத்திலிருந்து தரிசித்ததுமே அதன் துயர் நீங்கி விட்டதை உணர்ந்த



ஆஞ்சநேயன் உள்ளத்தில் உடனே அன்னையை காணவேண்டும் என்ற அவா எழுந்தது. பிறருக்கு நன்மை செய்யும்போது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இழந்தவற்றை பெற முடிகிறது என்ற உண்மைகளை ஜாம்பவான் எல்லோருக்கும் சொன்னான்.

அன்னை இருக்குமிடம் அறிந்தாயிற்று. இனிக்கடலைக் கடந்து அன்னையைக் காண வேண்டியதுதான். ஆனால், அத்தனை பரந்த கடலைக்கடக்க யாரால் முடியும் என்பதே பிரச்சினையாயிற்று. தங்களால் அது முடியாது என்றறிந்த வானரங்கள் எல்லாம் ஹனுமானைப் பார்த்தன. ஹனுமானோ அடக்கமே உருவாக தன்னால் அது முடியுமா என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது வயதில் மூத்தவனும், அனுமனின் பிறப்பு பற்றிய உண்மையை அறிந்தவனுமான ஜாம்பவான் ஹனுமானுக்கு உற்சாகமூட்டி, அவன் வீரத்தை அவனே உணரச் செய்து அரிய சாதனை புரியத் தூண்டுவதற்காக அவன் வரலாற்றை மற்றவர்களுக்குச் சொல்வது போலச் சொன்னான்.

ஜாம்பவான்: வானர வீரர்களே! கடலைத்தாண்டுவது பற்றி கவலை வேண்டாம். நம்மிடம் ஹனுமான் இருக்கிறான்.. அவன் சாதாரண வானர வீரன் அல்ல. அவனொரு தெய்வீக அவதாரம். அவன் பெருமை அவனுக்கே தெரியாது. அவன் அடக்கமுள்ளவன். கருணையே வடிவான அஞ்சனாதேவி இவன் தாய். உயிர்களுக்கெல்லாம் மூலாதாரமான மூச்சின் வடிவம் வாயு தேவன் இவன் தந்தை. இவன் பிறக்கும் போது தேவர்களைப் போன்ற முகப்பொலிவும், தெய்வீக அழகும் கொண்டவன். ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போது சூரியனைப்பழம் என்று எண்ணிய இவன் சூரியனைப்பிடிக்க நினைத்தான். வாயுவேகத்தில் விண்ணில் சாடினான். சூரியனை நோக்கிச்சென்று கொண்டிருந்தான். அப்போது யாரோ ஒரு அரக்கன்தான் சூரியனைப் பிடிக்க வருவதாக தவறாக எண்ணிய இந்திரன் தன் வஜ்ராயுதத்தை இவன் மீது எறிந்துவிட்டான்! வஜ்ராயுதம் தாக்கி பாலகன் மாருதி பூமியில் வந்து பிரக்ஞையற்ற நிலையில் விழுந்தான். அவன் முகம் பூமியில் தாக்கி வானர வடிவம் பெற்றது. தன் மகனுக்கு நேர்ந்த கதி கண்டு அஞ்சனாதேவி துடித்தாள். வாயுதேவன் வெகுண்டெழுந்தான். அவன் கோர ரூபத்தில் விண்ணையும், மண்ணையும் வியாபித்தான். மரங்கள் சாய்ந்தன. மலைகள் சரிந்தன. கடல் கொந்தளித்தது. பிரளய காலம் போல தோன்றியது. மும்மூர்த்திகளும், தேவர்களும் நடந்ததையறிந்து வாயுதேவனை சாந்தப்படுத்த

மாருதி அருகில் வந்து நின்றனர். சிவன் தன் சக்தியைத் தந்து மாருதியை புத்துயிர் பெறச் செய்தார். பிரம்மா தன் புத்தி பலத்தைத் தந்து அவனை ஞான மூர்த்தியாகத் திகழச் செய்தார். விஷ்ணு தன் பாசத்தால் அவனைப்பிணைத்து அவன் இதயத்தில் புகுந்து கொண்டு, காலமெல்லாம் தன்னுடன் இருக்கும் பாக்கியத்தை அளித்தார். இந்திரன் இவன்மீது எய்த வஜ்ராயுதத்தால் இவன் வஜ்ர தேகத்தைப் பெற்று விட்டான். தன்னைத் தேடிவந்த காரணத்தால் தனது சீடனுக்கிக் கொண்டு வேதங்களையும், சாஸ்திரங்களையும் இவனுக்குக் கற்பித்து இவன் குருவானுன் சூரிய தேவன். இதனையெல்லாம் அறிந்தேதான் இத்தனைபேர்கள் இருந்தும் இவனைத் தேர்ந்தெடுத்து கணையாழி தந்து வழியனுப்பியிருக்கிறுன் ஸ்ரீராமன். இவனுல் முடியாதது ஏதுமில்லை.

கதை சொல்பவர்: ஹனுமான் உள்ளத்தில் புதிய உற்சாகம் பிறந்தது. தன்னுல் முடியும் என்பதால்தானே ஸ்ரீராமன் இந்தப்பணியைத் தன்னிடம் தந்திருக்கிறுன். முடியாதென்று திரும்பினுல் அது ராமனுக்கு இழுக்கல்லவா என்று நினைத்த ஹனுமான் கடலைத் தாண்ட உறுதி பூண்டான். ஸ்ரீராமனின் புனித நாமத்தை ஜெபித்து புதிய பலம் பெற நினைத்தான்.

ராம்... ராம்... ராம்...

அப்போது மற்றவர்கள் ஹனுமான் புகழ் பாடினர்.

அஞ்சனு தேவி மைந்தன் ஆஞ்சநேயா
அணணல் ராமன் அடி சேர்ந்த ஹனுமந்தா
வானிலே தாவிச்சென்ற வாயு குமாரா
வையத்தை வாழ வைக்கும் வானரவீரா...
மகிமைகள் புரியவல்ல மஹானுபாவா
மன்னன் ராமன் சேவகனும் மாருதிதேவா
ஆஞ்சநேய வீரா, ஹனுமந்தரூபா
வாயுகுமாரா, வானர வீரா. மாருதிதேவா
மஹானுபாவா
ராம்.. ராம்... ராம்...

கதை சொல்பவர்: ஹனுமானின் உருவம் வளர ஆரம்பித்தது. அவன் பூமிக்கும், ஆகாயத்திற்குமாக விஸ்வரூபம் எடுத்து நின்றுன். அவன் நின்ற மலைக்குன்றின் முன் கடல் குளம் போல் காட்சி தந்தது. நல்ல காலத்தை எண்ணிக்காத்திருந்த தேவர்களெல்லாம் தங்கள் பலத்தை ஹனுமானுக்குத் தந்தனர். தெய்வங்கள் எல்லாம் வாழ்த்தி நின்றன.

ராம்..ராம்...ராம்... என்ற ஹனுமானின் குரல் எங்கும் எதிரொலித்தது. வானரங்கள் எல்லாம் வணங்கி நின்றன. ஜெய் ராம்!

ஹனுமான் விண்ணிலே சாடினான். தென்திசை நோக்கி பறந்தான். ராம நாமத்தால்தான் துன்ப சாகரத்





தைக் கடக்க முடியும் என்ற உண்மையை உலகுக்குக் காட்டி விண்ணிலே பறந்து கொண்டிருந்தான் ஹனுமான்.

ராம்.. ராம்... ராம்...

இராமாயணம்: **கிஷ்கிந்தாகாண்டம்** முற்றியது.

அடுத்தது: **சுந்தரகாண்டம்**





இதுவரை
கிஷ்கிந்தாகாண்டம்
கேட்டீர்கள்.

எமது அடுத்த
காஸெட்டில்
சுந்தரகாண்டம்

ஸ்ரீராம் ஜெயராம்
ஜெயஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம்
ஜெயஜெயராம்

பதிப்பு உரிமை:
இதயம் எஜுகேஷனல்
காஸெட்ஸ்

Idhayam Educational Cassettes
26, Murrays Gate Rd, Madras-600018.
TEL : 441426